1973 நவம்பர் 28]

சென்னை-2, ஆகிய இருவரும் பாட நூல் குழுவில் தெலுங்கு மொழி வல்லுநர்களாக உள்ளனர்.

திரு. கே. எ. வகாப் : இந்த பாட நூல் குழுவில் ஒவ்வொரு மைனாரிட்டி மொழிகளுக்கும் அங்கம் கொடுக்கப்படுகிறதா? உருது மொழி போன்றவற்றிற்கும் அப்படி இடம் அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

Sale of "Bazaar Notes"

* 453 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Seminar on Nationalisation of Text Books conducted by the Tamil Nadu Text Book Society has recommended to the Government to ban "Bazaar Notes" during January 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இந்தக் கருத்தரங்கில் அங்காடி குறிப்புகள் ("Bazaar Notes) அச்சிடப்பட்டு விற்பனை செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், இந்தக் குறிப்புகளை உபயோகிப்பதால் ஏற்படும் கெடுதல்களை வலியுறுத்தப் பாட நூல் நிறுவனத்தின் அங்கங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கொள்கையளவில் அரசுக்கு இக்கருத்து உடன்பாடானதே. நடைமுறையில் இதை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

Thiruvanmiyur as tourist centre

* 454 Q.—Thiru N. DENNIS : : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to promote the beach at Thiruvanmiyur near Madras as a Centre of Tourist Traffic?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.